# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழம் - ரத்மலான மற்றும் தெற்குப் பல்கலைக்கழகம் - சூரியவெவ

**01. மின்னியலாளர் - தரம் II**

சம்பள அளவுத்திட்டம்: U-PL3(III) ரூ. 29,915-16x270-34,235 மாதாந்தம்

ஆகக்குறைந்த தகைமைகள்:

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1. வாசிப்பதற்கும் எழுதுவதற்குமான திறமை

2. பின்வரும் கருமங்களில் பரிட்சயம் உடையவராக இருத்தல் வேண்டும்:-
   a. முறிவுகளையும் குறைகளையும் கண்டறிந்து பழுபார்த்தல், மூலப்பொருட்களையும், மின்மாற்றிகளையும், சகல வகை இயந்திராதிகளையும், கேபெல்களையும், வயர்களையும் இணைத்தல், அவற்றின் அளவுகள், அளவீட்டு உபகரணங்கள் மற்றும் அவற்றின் பாவனைகள், பல வகையான கம்பியிணைப்பு, தொடுத்தல், சோதனையிடும் மாணிகள் மற்றும் சிறு மின்மாற்றிகள்
   b. வரைபுகளையும் மற்றும் வரைபடங்களையும் வாசித்து அறிந்துகொள்ளல். அளவுகளையும் பகுதியளவான பரிமாணங்களின் பதிவுகளையும் வாசித்தறிதல்.
   c. தொழிலில் கருவிசாதனங்களை கவனமாக கையாளுதல்.

3. ஒரு அரசாங்கத் திணைக்களத்தில், அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் ஒரு மின்னியல் தொழிலாளராக பணியாற்றிய 2 வருடங்களுக்கு குறையாத கால அனுபவம்.

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

1. உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கான மேற்குறித்த அதே (1), (2), (3) விடயங்கள் ஏற்புடையதாகும்.

4. வயதெல்லை:- 40 வயதுக்கு மேற்படாதிருத்தல்.

**பொது நிபந்தனைகள்**

01. நல்லொழுக்கமுடைய ஒரு இலங்கைப் பிரஜையாக இருத்தல்.

02. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அங்கீகரித்துள்ள உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்கவும் மற்றும் நேர்முகப் பரீட்சையில் பெறும் பெறுபேறுகளின் அடிப்படையிலும் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

03. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு முன்னர் அவர்களை பட்டியல்படுத்த பல்கலைக்கழகத்திற்கு முழு உரிமையும் உண்டு.

04. கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைழக்கத்தின் இணையத்தளத்தில் **(https://kdu.ac.lk)** கிடைக்கக் கூடியதாகவுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதன் ஊடாக உரிய பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் தகுதி பெறுவார்கள். பூரணமற்ற அல்லது குறித்த மாதிரிப் படிவத்தில் அல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. இந்த நிறுவனத்தினால் 15% வீதமும், ஊழியரினால் 10% வீதமும் ஊதியத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படும் என்பதுடன் நிறுவனத்தினால் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% வீதம் பங்களிப்பு செய்யப்படும்.

06. நியமனம் பற்றிய ஏனைய நிபந்தனைகள் 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவிருக்கும்.

07. பல்கலைக்கழகங்களின்/நிறுவனங்களின்/அரசாங்க அலுவலகங்களின்/கூட்டுத்தாபனங்களின் அல்லது நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனங்களின் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

**08.** பல்கலைக்கழகத்தின் மாதிரிப் படிவத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கல்வி/தொழில் தகைமை சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் பிறப்பு சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது பிறப்பு சான்றிதழ்கள் முதலிய ஆவணங்களுடன் ***பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலப் பாதுகாப்புப் பல்கலைக்கழம், ரத்மலான*** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படலாம்.

**09.** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2024.03....**